## சப்ரகமுவ மாகாண கல்வித் திணைக்களம்

**தாய்மொழி - தரம் 02 / இரண்டாந் தவணை - முதலாம் வாரம் ( $L_4$ $S_4$ $R_4$ $W_4$ )**

**தயாரிப்பு – இரத்தினபுரி கல்வி வலயம், ஆரம்பபிரிவு / ஆசிரிய ஆலோசகர் வீ.ராஜகுமாரி**

❖ பின்வரும் அறிவித்தல்களையும் அறிவுறுத்தல்களையும் பிள்ளைக்கு தெளிவாக வாசித்துக் காட்டுவதோடு, செயற்படுத்தவும் பெற்றார் வழிப்படுத்துங்கள்.

❖ **அறிவித்தல்கள்.**

1). நாளை பாடசாலை விடுமுறை தினமாகும்.

2). நாளை பாடசாலையில் சிறுவர் தினம் கொண்டாடப்படும்.

3). இன்று கோலப் போட்டி நடைபெறும்.

4). நாளை மறுதினம் கதை சொல்லும் போட்டி நடைபெறும்.

5). நாளை உணவு கொண்டுவர வேண்டாம்.

❖ **அறிவுறுத்தல்கள்.**

1). கைகளை எப்போதும் சுத்தமாக வைத்திருக்க வேண்டும்.

2). உணவு உண்ண முன்பும், உண்ட பின்பும் கைகளைக் கழுவ வேண்டும்.

3). காலையும் மாலையும் கடவுளை வணங்க வேண்டும்.

4). நித்திரை விட்டு எழும்பும் போதும், நித்திரைக்குச் செல்லும் முன்பும் பற்களை நன்றாகத் துலக்க வேண்டும்.

5). வெளியில் செல்லும் போது முகக்கவசம் அணிய வேண்டும்.

I. பயிற்சிகள் – விடுபட்ட எழுத்துக்களைப் பூர்த்தி செய்க.

i). வ......ப்பறை

ii). பொ.....ட்கள்

iii). பாட......சாலை

iv). சி.......வர்

v). சுத்......மாக

vi). உண......

vii). கைக......

viii). சவர்க்.......ரம்

ix). மு......ம்

II. ஒருமைச் சொற்களுக்குரிய பன்மைச் சொற்களை எழுதுக.

உ+ம் – கை - கைகள்

i). விரல் - ................

ii). நகம் - ................

iii). பல் - ................

iv). துணி - ................

v). சிறுவர் - ................

vi). படம் - ................

vii). புத்தகம் - ................

viii). பிள்ளை - ................

ix). இடம் - ................

x). தினம் - ................